வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி 10.10.2025 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

மத்திய அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் குறித்து பழங்குடியின சமூகத்தினர் அறிந்து கொள்ள வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, கேட்டுக் கொண்டுள்ளார்.

நாட்டின் சுயசார்பிற்கும், விவசாயிகளின் நலனுக்கும் 2 திட்டங்கள் இன்று தொடங்கப்பட்டதாக, பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, காரைக்காலில், 130.17 கோடி ரூபாய் மதிப்பிலான ஒருங்கிணைந்த மீன் பிடி துறைமுக அபிவிருத்தி திட்ட விரிவாக பணியை காணொளி காட்சி மூலம் அடிக்கல் நாட்டினார்.

தீபாவளி மற்றும் தொடர்ந்து வரும் பண்டிகையை கருத்தில் கொண்டு, நாடு முழுவதும் அதிக அளவில் சிறப்புரயில்களை இயக்க திட்டமிட்டுள்ளதாக மத்திய ரயில்வேத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

முர்மு (17)

மத்திய அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் குறித்து பழங்குடியின சமூகத்தினர் அறிந்து கொள்ள வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, கேட்டுக் கொண்டுள்ளார். குஜராத் மாநிலத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவர், அங்கு ஜூனகத் மாவட்டத்தில் பழங்குடியின குழுவான சித்தி சமூகத்தினருடன் கலந்துரையாடினார். அந்த சமூகத்தினர், 72 சதவிகிதத்திற்கும் அதிகமான அளவிற்கு கல்வி அறிவு பெற்றுள்ளமைக்கு அவர் மகிழ்ச்சிதெரிவித்தார். வாழ்க்கை முன்னேற்றத்திற்கு கல்வி அறிவு ஒரு வழி என்றும், அதனை தொடர வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். பழங்குடியின சமூக மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு மத்திய அரசு பல திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும், இதுகுறித்து பழங்குடியின மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். பழங்குடியின சமூக மக்களின் இயற்கைக்கு உகந்த வாழ்க்கை முறையையும் அவர் பாராட்டினார். வரும் 2047ஆம் ஆண்டிற்குள் வளர்ச்சி அடைந்த இந்தியா என்ற இலக்கை அடைய சமத்துவம், அனைவருக்கும் நீதி மற்றும் பழங்குடியின மக்களின் உரிமைகளை பாதுகாக்கப்பதை உறுதி செய்வது ஆகியவை அவசியம் என்றும், அவர் தெரிவித்தார்.

மோடி-தன்-தான்ய திட்டம் 1 (19)

நாட்டின் சுயசார்பிற்கும், விவசாயிகளின் நலனுக்கும் 2 திட்டங்கள் இன்று தொடங்கப்பட்டதாக, பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் உள்ள, இந்திய வேளாண் ஆராய்ச்சி மையத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், வேளாண் துறையில் 35 ஆயிரத்து 440 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2 முக்கிய திட்டங்களை அவர் இன்று தொடக்கி வைத்தார். மேலும், வேளாண் மற்றும் அதனை சார்ந்துள்ள பல்வேறு துறைகளில், 42 ஆயிரம் கோடி ருபாய்க்கும் அதிகமான மதிப்புள்ள பல திட்டங்களுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார். பிரதமரின் தன்-தான்ய வேளாண் திட்டம் மற்றும் பருப்பு வகை உற்பத்தியில் தன்னிறைவுத் திட்டம் ஆகியவற்றை அவர் அறிமுகப்படுத்தினார். நிகழ்ச்சியில் பேசிய பிரதமர், இன்று, வரலாற்று சிறப்புமிக்க நாள் என்றும், நாட்டின் வரலாற்றை உருவாக்கிய 2 சிறந்த ஞானிகள் பிறந்த நாள் என்றும் தெரிவித்தார். பாரத ரத்னா ஜெய்பிரகாஷ் நாராயணன், நாநாஜி தேஷ்முக் ஆகியோர் இந்தியாவின் மகத்தான, ஜனநாயகத்திற்கான புரட்சியின் முன்னோடிகளாக அவர்கள் இருந்தனர் என்றும் பிரதமர் தெரிவித்தார். இந்த சிறப்பு வாய்ந்த நாளில் தொடங்கப்பட்ட 2 முக்கிய திட்டங்கள், நாட்டில் உள்ள லட்சக்கணக்கான விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார். இந்த திட்டங்களுக்காக மத்திய அரசு 35 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் மேல்

ஒதுக்கி உள்ளதாக, பிரதமர் தெரிவித்தார். தன்-தான்ய வேளான் திட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட 100 மாவட்டங்களில் விவசாய உற்பத்தித் திறனை மேம்படுத்தி, பயிர் பல்வகைப் படுத்துதல், மற்றும், நிலையான விவசாய நடைமுறைகளை அதிகரிக்க செய்வதாகும். மேலும் இத்திட்டத்தின் மூலம் நீர்பாசன வசதிகளை மேம்படுத்துதல், நீண்டகால மற்றும் குறுகிய கால கடன் கிடைப்பதை எளிதாக்குதல் ஆகியவற்றை நோக்கமாக கொண்டதாகும். இத்திட்டம், 24 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் தொடங்கப்பட்டுள்ளது. மேலும், பருப்பு வகை உற்பத்தியில், தன்னிறைவுத் திட்டம் 11 ஆயிரத்து 440 கோடி ரூபாய் செலவில் தொடங்கப்பட்டுள்ளது. இது பருப்பு வகை உற்பத்தி அளவை மேம்படுத்தி, பருப்பு சாகுபடியின் பரப்பளவை விரிவுப்படுத்துகிறது. மேலும், கொள்முதல், சேமிப்பு, பதப்படுத்துதல் போன்றவற்றை நோக்கமாக கொண்டு செயல்படுகிறது.

பிரதமரின் இந்த நிகழ்ச்சி தொடர்பாக மத்திய வேளாண் அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்.....

(வாய்ஸ்)

மோடி-தன்-தான்ய திட்டம் 3 (10)

(வாய்ஸ்)

பிரதமரின் தன்-தான்ய வேளாண் திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் உள்ள மிக குறைந்த வேளாண் உற்பத்தித் திறன் கொண்ட 100 மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டு, வேளாண்மையை மேம்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த தலைமை மேற்கொள்ளப்பட உள்ளதாகவும், இதன்மூலம், விவசாயிகளின் வருமானம் உயரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், பாசன வசதி, பல்வேறு பயிர்கள் சாகுபடி, மற்றும், சேமிப்பு கிடங்கு உள்ளிட்டவையும் வழங்கப்பட உள்ளன. அதே நேரத்தில், பருப்பு வகை உற்பத்தியில் தன்னிறைவுத் திட்டம் உள்ளிட்ட பருப்பு வகை உற்பத்தியை ஊக்குவிக்க இருப்பதாகவும், அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*நானாஜி தேஷ்முக் பிறந்தநாள் (4)*

பாரத ரத்னா நானாஜி தேஷ்முகின் பிறந்த நாளை ஒட்டி, அவருக்கு குடியரசுத் துணைத் தலைவர் திரு. சிபி ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திரமோடி, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, பாஜக தேசிய தலைவர் திரு.ஜே.பி நட்டா ஆகியோர் மரியாதை செலுத்தினர்.

*ஜெய்பிரகாஷ் நாராயன் வாழ்த்து* (15)

சுதந்திர போராட்ட வீரர் லோக் நாயக் ஜெய்பிரகாஷ் நாராயணனின் பிறந்த நாளை ஒட்டி, அவருக்கு குடியரசுத் துணைத் தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் புகழஞ்சலி செலுத்தி உள்ளனர். இதுதொடர்பாக குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள சமூக ஊடகப் பதிவில், மக்களுக்கான உரிமைகள், மற்றும், மக்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கு அவர் கடுமையாக பாடுபட்ட தலைவர் என குறிப்பிட்டுள்ளார். அமைதியான மற்றும் ஜனநாயக வழியில் சமூக மாற்றத்திற்கு பாடுபடும் தலைமுறையினரை அவரது வாழ்க்கை தொடர்ந்து ஊக்கமளிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேபோல், பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள பதிவில், சாதாரண மக்களுக்குஅதிகாரம் அளிப்பதிலும், இந்திய அரசியல் அமைப்பின் ஒருமைப்பாட்டை பாதுகாப்பதிலும் அவர் பங்கை

எடுத்துரைத்தார். குஜராத் மற்றும் பீகாரில், ஜெய்பிரகாஷ் நாராயணன் தலைமையிலான இயக்கங்கள், நாடு முழுவதும் சமூக, அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தியதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

*காரைக்கால்-கைலாஷ்நாதன் 1 (18)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, புதுவைப் பகுதி காரைக்காலில், 130.17 கோடி ரூபாய் மதிப்பிலான திறன் மிகு மற்றும் ஒருங்கிணைந்த மீன் பிடி துறைமுக அபிவிருத்தி திட்ட விரிவாக பணியை காணொளி காட்சி மூலம் அடிக்கல் நாட்டினார். நிகழ்ச்சியில், புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், சட்டப்பேரவைத் தலைவர் திரு. செல்வம், பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், வேளாண் அமைச்சர் திரு. ஜெயகுமார் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், புதுச்சேரி மாநிலத்தில், பிரதமரின் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 131 கோடி ரூபாய் செலவில், இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாகவும், இத்திட்டத்திற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று அடிக்கல் நாட்டி உள்ளதாக தெரிவித்தார்.. இதற்காக முயற்சிகளை எடுத்து வரும் முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களையும்

பாராட்டுவதாக அவர் கூறினார். புதுச்சேரியில் ஏற்கனவே தொடங்கப்பட்ட கடல்பாசித் திட்டம், கூண்டு மீன் வளர்ப்புத் திட்டம், மீன் உலர் திட்டம் போன்றவை இப்போது சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்.....

(வாய்ஸ்)

*காரைக்கால்-கைலாஷ்நாதன் 2 (19)*

(வாய்ஸ்)

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் ஒப்புதலோடு, புதுச்சேரி-காரைக்காலை, நாட்டில் உள்ள 34 மீன்வள மேம்பாட்டு மண்டலங்களில் ஒன்றாக மத்திய அரசு அறிவித்துள்ளதாகவும் கவர்னர் திரு கைலாஷ்நாதன் தெரிவித்தார். இதன் அடுத்தகட்ட நடவடிக்கையாக இன்று ஸ்மார்ட் மற்றும் ஒருங்கிணைந்த மீன்பிடி துறைமுக விரிவாக்கத் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டு விழா என்றும் அவர் கூறினார். இந்த மையத்தின் மூலம், காரைக்கால் பகுதி பெரிய அளவில் பயனடையும் என்றும், இத்திட்டம் செயல்பாட்டிற்கு வரும்போது, துறைமுகத்தின் உள்கட்டமைப்பு மேம்படுத்தப்படும் என்றும், அவர் கூறினார். இதன் மூலம் பெரிய மற்றும் சிறிய படகுகள் நிறுத்த வசதிகள் ஏற்படும் என்றும், அவர் தெரிவித்தார். திட்டம் செயல்பாட்டிற்கு வரும்போது காரைக்கால் பகுதியில், பொருளாதார செழுமை ஏற்படும் என்றும், இதன்மூலம், கடலோர கிராமங்கள், குறிப்பாக, மீனவ சமுதாய இளைஞர்களின் எதிர்காலம் வலுவடையும் என்றும், துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன்

தெரிவித்தார். திட்டத்தின் ஒரு பகுதியாக, பிடிபட்ட மீன்வளத்தை துறைமுகத்தில் இருந்து கடைவீதிகளுக்கு ட்ரோன் மூலம் கொண்டு செல்ல வழித்தடம் ஏற்படுத்தப்படும் என்றும், இதன்மூலம், மீனவர்கள் தங்கள் மீன்களை கொண்டு செல்வதற்கான நேரம், பணம் மிச்சமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

*காரைக்கால்-கைலாஷ்நாதன் 3 (11)*

---

இதேபோல், புதுச்சேரியில் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலை ஊக்கப்படுத்துவதற்காக மானியக் கடன்கள் அளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். மீனவ பெண்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதற்காக, மீனவர் மகளிர் கூட்டுறவ சங்கங்கள் தொடங்கப்பட்டு, மீனவ பெண்களின் பெயரில் இந்த கடன்கள் மானிய உதவியுடன் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். இத்திட்டத்த செயல்படுத்துவதற்காக ஒத்துழைப்பு அளித்த மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங்-கிற்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் தெரிவித்தார். இத்திட்டம், புதுச்சேரி பகுதியைச் சேர்ந்த மீனவர்களுக்கு ஒரு புதிய வெளிச்சத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

ரயில்வே (16)

தீபாவளி மற்றும் தொடர்ந்து வரும் பண்டிகையை கருத்தில் கொண்டு, நாடு முழுவதும் அதிக அளவில் சிறப்புரயில்களை இயக்க திட்டமிட்டுள்ளதாக மத்திய ரயில்வேத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில், ரயில் நிலையத்திற்கு சென்று புதிதாக கட்டப்பட்ட பயணிகள் வசதி மையத்தை அவர் இன்று ஆய்வு செய்தார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ரயில் பயணிகள் எளிதாக டிக்கெட் பெறுவதற்கு வசதியாக டிக்கெட் கவுண்டர்கள் அனைத்தும் இந்த மையத்திற்கு மாற்றப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார். இந்த மையம் பயணிகளுக்கு ரயில் போக்குவரத்தை எளிதாக்கும் என்றும், இதில், தாணியங்கி டிக்கெட் விற்பனை இயந்திரங்கள், 150 க்கும் மேற்பட்ட கழிப்பறைகள், குடிநீர் விநியோகிக்கும் இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். பண்டிகை காலங்களில் பயணிகளின் கூட்ட நெரிசலை கட்டுப்படுத்த 76 ரயில் நிலையங்களிலும் நிரந்தர தங்கும் இடம் பகுதி கட்டப்படும் என்றும் அவர் தெரிவித்தார். தீபாவளி மற்றும் சத்பூஜை பண்டிகைகளை முன்னிட்டு 12 ஆயிரம் சிறப்பு ரயில்கள் இயக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

*வானிலை (6)*

தெற்கு கர்நாடகாவின் உள்பகுதி, தமிழ்நாடு, புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புகள் உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதனிடையே, வங்கக்கடல் பகுதியில் நாளை வரை மோசமான வானிலை நிலவுவதால், மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என, இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

மத்திய அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் குறித்து பழங்குடியின சமூகத்தினர் அறிந்து கொள்ள வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, கேட்டுக் கொண்டுள்ளார்.

நாட்டின் சுயசார்பிற்கும், விவசாயிகளின் நலனுக்கும் 2 திட்டங்கள் இன்று தொடங்கப்பட்டதாக, பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, காரைக்காலில், 130.17 கோடி ரூபாய் மதிப்பிலான ஒருங்கிணைந்த மீன் பிடி துறைமுக அபிவிருத்தி திட்ட விரிவாக பணியை காணொளி காட்சி மூலம் அடிக்கல் நாட்டினார்.

தீபாவளி மற்றும் தொடர்ந்து வரும் பண்டிகையை கருத்தில் கொண்டு, நாடு முழுவதும் அதிக அளவில் சிறப்புரயில்களை இயக்க திட்டமிட்டுள்ளதாக

மத்திய ரயில்வேத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது